மாலை மணி

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

மாலை 4 | சென்னை 27-7-54 | மணி 37

★ அரசியல் ஒரு கூடம்! குப்பைகளை ஒதுக்குவோம்! ★

....

ஜனநாயகப் பாதையில் தி. மு. கழகம்

மும்முனைப் போர் முழக்கம்! மகத்தான வெற்றி!

சைதையில் சம்பத் முழக்கம்

அரசியல் என்பது ஒரு கூடம். பலர் கூடும் அந்தக் கூடத்திலே குப்பைகள் இருக்கத்தான் இருக்கும், வீட்டில் சேரும் குப்பைகளை விடிந்தால் விளக்குமாறு கொண்டு ஒதுக்கித் தள்ளுவது போல, அரசியல் கூடத்தில் உள்ள ஈனபுத்தி படைத்த குப்பைக் கட்சிகளையும் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டும்.

வீட்டில் குப்பை விழும் ஒவ்வொரு தடவையுமா கூட்டிக்கொண்டிருக்க முடியும்? முடியாது, அதுபோலத்தான் அரசியலில் காணப்படும் குப்பைக் கட்சிகளும் சிறிது காலம் நடமாடட்டும். விரைவில் அவை தாமாக சலித்து, நலிந்து நாதியற்றுப் போய்விடும். விடிந்தால் கூடத்துக் குப்பைகளை விளக்குமாறு கொண்டு ஒதுக்குவது போல அவர்களை மக்கள் மன்றமும் ஒதுக்கித் தள்ளிவிடும்,

அரசியல் ஈனத்தனம் புரிந்து நடமாடும் குலத் துரோகிகளைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை. துரோகம் என்றுமே வெற்றி கண்டதில்லை என்பதை உணர்ந்து கழகப்பணியில் ஈடுபடுங்கள். மும்முனைப் போராட்டங்களிலே நாம் பெற்ற வெற்றிகள் நமது ஊக்கத்தையும் உழைப்பையும் வலுப்படுத்தி வரப்போகும் விடுதலைப் போராட்டத்திற்கு நம்மைத் தயார் செய்துவிட்டது. அந்த விடுதலைப் போரினை விரைவில் நடத்தி முடிப்போம்.

சென்னை, ஜுலை. 27—

நேற்று மாலை சைதாப்பேட்டையில் நடந்த தி, மு, கழக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றிய பொழுது தோழர் ஈ, வே. கி. சம்பத் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டு மேலும் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! சைதாப்பேட்டையில் இப்படிப்பட்ட மகத்தானதோர் கூட்டத்தை ஏற்பாடு செய்து இந்த தி, மு. கழக ஆண்டு விழாவிலே கலந்து கொள்ளும் வாய்ப்பினை எனக்களித்தமைக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆண்டு விழா இங்கே கொண்டாடப்படுகின்றது. மும்முனைப் போராட்ட வெற்றி விழா கொண்டாடி வரும் நேரத்திலே இந்த விழா நடைபெறுகின்றபடியால் நான் நாம் கடந்த ஆண்டு நடத்தி வெற்றி கண்ட மும்முனைப் போராட்டங்களை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் நாம் கண்ட வெற்றிகளை எண்ணி மேலும் முன்னேற வேண்டுகிறேன், ஆச்சாரியார் ஆட்சிபீடமேறியபோதே ஜனநாயகத்தைக் கொலை செய்து விட்டுத்தான் கொல்லைப்புறமாக நுழைந்தார். அப்போதே அவரைத் தட்டிக் கேட்டோம், இந்த அநீதி அடுக்குமா? அக்கிரமம் ஆகுமா என்று. அவைகளை ஆச்சாரியார் அலட்சியம் செய்தார்.

ஆச்சாரியார் சனாதன தர்மத்தைப் பாதுகாக்கவே ஆட்சிப் பீடமேறினார். அவர் புதிய கல்வித் திட்டம் என்ற பெயரால் நாட்டிலே சனாதனத்தை வேரூன்றிட முனைந்தார். இயேசு கேட்டாரா, நபி கேட்டாரா புத்தர் கேட்டாரா என்று மக்களிடையே தன்னையும் ஓர் மகான் எனத் தம்மைத்தாமே அறிமுகப் படுத்தித் தமது பொல்லாத குலதர்மக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவு தேட முற்பட்டார். கல்கி பத்திரிகையைத் துணைக் கொண்டார். பத்திரிகைகளும் துணை நின்றன.

அரசியல் ஈனத்தனத்தையே பிழைப்பாகக்கொண்டுள்ள சிவஞானங்களைவிட்டுப் பேசும்படி செய்தார்,

ஆச்சாரியார் என்னசெய்தும் அவரது ஆணவத் திட்டத்திற்கு எங்கும் எதிர்ப்பு ஏற்பட்டன. எல்லாக்கட்சிகளும் ஒருங்கே எதிர்த்தன. ஆனால் தி, மு, கழகம் ஒன்றுமட்டுந்தான் கண்டன அறிக்கை விடுவதோடு தனது எதிர்ப்பைச் சுருட்டிக் கொள்ளாது, நேரடி நடவடிக்கையிலும் ஈடுபட்டது. அறப்போரில் ஈடுபட்டு அரும்பெரும் பணிகளைப் புரிந்துள்ளது.

எல்லா சனநாயக வழிமுறைகளையும் கையாண்டதன் பின்னர்தான், தி. மு. க. கல்வித்திட்டப் போராட்டத்தில் ஈடுபட்டது. அதே போலத்தான். கல்லக்குடி போராட்டத்திலும் பல மாதங்கள் முன்னறிவிப்பு கொடுத்தபின்பே செயலாற்றத் தொடங்கியது. நேரு 'நான் சென்ஸ்' என்று கூறியதைக் கண்டித்து நடத்திய ரயில்நிறுத்தப்போரும் பகிரங்கமான முன்னறிவிப்புக்குப் பின்னர்தான் தொடங்கப்பட்டது.

மூன்று முனைகளிலேபோராட்டங்களைத் துவக்கிய தி. மு, கழகம் தனது நடவடிக்கைகளைப் பற்றியும் போராட்ட முறைகளைப் பற்றியும் ஒளிவுமறைவின்றி பகிரங்கமாகவே தெரிவித்தது. போராட்ட நாட்களையும், இடம், காலம், கலந்து கொள்பவர் பெயர் ஆகியவற்றுடன் முதலிலேயே தெரிவித்துவிட்டது. ஆனால் ஆச்சாரியார் மட்டும் ஏதும் செய்யப் போவதில்லை என்று கூறிக்கொண்டே திடீரென்று அறிஞர் அண்ணாவையும், மற்றும் நால்வரையும் கழகக் கட்டிடத்தை இருட்டுவேளையிலே முற்றுகை யிட்டுக் கைது செய்தார்.

பகிரங்கமாகத் தெரிவித்து முன் கூட்டியே போர் முரசறைந்து போர் மூண்டுவிட்டது, கோழைகளே விலகியோடுங்கள் என்று தெரிவித்துப் போரிடும் நமது பண்பு—மறைந்திருந்து தாக்குவது ஆச்சாரியாரின் பரம்பரைப் பண்பு என்பதைக் காட்டிக்கொண்டார் என்று தான் இதிலிருந்து தெரிகிறது,

[தொடரும்]

இந்தூர் கல்லூரி மூடப்பட்டது

இந்தூர், ஜுலை, 26—

இந்தூர் கல்லூரி மாணவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக, கல்லூரியை காலவரையின்றி மூடி விட மத்திய பாரத் சர்க்கார் தீர்மானித்து விட்டதாம். இக்கிளர்ச்சி சம்பந்தமாக பூர்ண விசாரணை செய்ய சர்க்கார் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது

கூட்ஸ் விபத்து

திண்டிவனம் அருகே நேற்றிரவு ஒரு கூட்ஸ் வண்டியின் 3 வாகன்கள் கவிழ்ந்தது அதன் விளைவாக சென்னை வரும் வண்டிகள் தாமதித்து வந்தன தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் இன்று 9 மணிநேரம் தாமதித்து எழும்பூரை வந்தடைந்தது. பிறகு இன்று காலை இரயில் பாதை சீர்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

சென்னை சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம்!

ஆகஸ்டு 9-ந்தேதி நடக்குமாம்

பி. சோ. கட்சி தீர்மானம்

சென்னை, ஜுலை 26—

சென்னை சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம் செய்வதென, சென்னை நகர பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியினர் முடிவு செய்துள்ளனராம்.

நிலச் சீர்திருத்தத்தை விரைவில் கொண்டு வருமாறு சர்க்கரை வற்புத்துவதற்காகவே, இந்த ஆர்பாட்டம் நடக்குமாம்

ஆகஸ்டு 9-ந்தேதி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுமெனத் தெரிகிறது. இதற்கென 9 பேர் கொண்ட செயற்குழுவொன்று நிறுவப்பட்டிருக்கிறது. ஆகஸ்டு 1-ந்தேதி முதல் பல கூட்டங்கள் நடத்தி, ஆர்ப்பாட்டத்தின் அவசியம் குறித்து விளக்கப்படுமாம்.

மாலைமணி

சென்னை 27—7—54

கடவுள் இருக்கிறாரே காப்பாற்ற நாம் யார்?

“வெளி நாடுகளுக்கு நான் செல்லும்போது, அங்கே உள்ள ஆரோக்கியமான அழகான பசுக்களைக் கண்டு, என் இதயம் பூரித்துப்போகிறது. அவைகள் அதிக அளவு பால் தருவதோடு, அந்தப் பாலில் ஏடு அதிகமாகவும் இருக்கிறது. பசுவின் பாலைக் குடிப்பது என வழக்கமில்லை யென்ற போதிலும், வெளிநாட்டிலுள்ள பசுவின் பாலைக் காணும்போது, எனக்கு அலாதியான பிரியம் ஏற்படுகிறது! ஆகவே அதைக்கொஞ்சம் சாப்பிடுவேன்!” என்று பண்டித நேரு, ஆஜ்மீரில் பேசிய ஒரு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆரோக்கிய மாகவும் அழகாகவுமிருக்கும் அயல் நாட்டுப் பசுகளைப் பார்ப்பதில் பரமானந்தம் ஏற்படுவதாகவும், அவற்றின் பால் குடிக்க வேண்டுமென்ற எண்ணத்தை எழுப்புவதாகவும், குடித்தால் சுவை மிகுந்திருப்பதாகவும் சொல்கிறார், நேரு! இது உண்மை! சினிமாப்படங்களில் காட்டப்படும் வெளிநாட்டுப்பால் பண்ணைகளையும், அங்கே யானைகளைப்போல் நடமாடும் பசுக்களையும், அவற்றின் பாலைப் பெரிய பெரிய ‘பக்கெட்’ களிலே கறப்பதையும் காணும் நமக்கே உள்ளம் உவப்பு கொள்கிறதென்றால், உண்மையிலேயே நேரில் கண்ட பண்டிதருக்கு அத்தகைய உணர்ச்சி ஏற்படுவதில் ஆச்சரியம் ஒன்று மில்லை!

விலா எலும்புகள் வெளியே தெரிய, தோலிலிருக்கும் புண்ணைக்காக்கைகள் குத்த, கண்ணில் பீளைவழிய, கால்களை எடுத்து வைக்கவும் ஜீவனில்லாமல் தவிக்கும் பசுக்களையே நாம் இந்தப் புண்ணிய பூமியில் பார்த்துப் பார்த்துப் பழகி விட்டோம்! அத்தகைய பசுக்களைப் பார்ப்பதற்கே பரிதாபமும் அருவருப்பும் ஏற்படுகிறதென்றால், அவற்றின் பாலைக் குடிக்க வேண்டுமென்ற எண்ணமா எழும்?

கால் நடைகள் ஒரு நாட்டின் செல்வங்கள்! அவற்றை எப்படிப் பாதுகாக்க வேண்டும், பராமரிக்க வேண்டும் என்ற சாதாரண அறிவு நம் மக்களுக்கு இன்னமும் ஏற்பட வில்லையே என்று எண்ணுகையில்தான் நமக்கு வேதனை உண்டாகிறது.

அறியாமையில் இந்நாட்டு மக்களை மூழ்கடிக்க, ஆரியம் செய்திருக்கும் அக்கிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல! ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கடவுட் தன்மை கற்பித்து, அவற்றின் உண்மையை அறியமுடியாதபடிச் செய்துவைத்து விட்டிருக்கிறது!

காக்கையா—அது முடமான சனியின் வாகனம்!

காளைமாடா—அது பார்வதியைப் பக்கத்தில் கொண்ட சிவனாரின் வாகனம்! கருடனா—அது திருமாலின் வாகனம்! இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதை! அந்தக்கதை தான் மக்கள் மனதில் ஊறியிருக்கிறதே அன்றி, தினந்தினம் காணும் உயிரினங்களைப் பற்றிய உண்மை ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது!

“இந்திய மக்கள் பசுவைத் தெய்வமாக வழிபடுகிறார்கள்! அப்படியிருந்தும் நம் நாட்டில் பசுக்கள் சரியான சம்ரட்சணை இன்றி, கவனிப் பாரற்று இருக்கின்றன!” என்று அதேபேச்சில் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

வளர்க்கத் தெரியாவிட்டாலும், வணங்குகிறார்கள் கடவுள் என்று பசுவை! பசுவைப்பற்றி புராணங்கள் எவ்வளவு கூறியிருக்கின்றன. அத்தகைய மாண்பு மிக்க பசுவை நாம் வேறு கவனிக்க வேண்டுமா என்ற எண்ணம், புராணத்தில் மூழ்கிய மக்கள் மனதில் உண்டாகும் அல்லவா? பசுக்களின் இன்றைய அவல நிலைமைக்கு அத்தகைய மனப் பான்மையே காரணம் என்றால், அதில் உண்மை இல்லாமல் போக முடியுமா?

நாட்டிலே நடமாடும் பசுக்களைப் பற்றி, புராண ஏட்டிலே தீட்டப்பட்டிருப்பதைக் கேளுங்கள்:—

“இப்பசுக்களின் தேகத்தில் தேவர்கள் விரும்பி வாழ்கிறார்கள்! இவற்றின் கொம்புகளின் அடியில் பிரம விஷ்ணுக்களும் கொம்புகளின் நுனியில் தீர்த்தங்கள் அனைத்தும் தங்கும்! சிரத்தில் சிவமூர்த்தியும், மூக்கின் நுனியில் கந்தமூர்த்தியும், மூக்குக்குள் இந்திரனும், கன்னங்களின் நடுவில் அச்சுவினி தேவர்களும் இரண்டு கணைகளில் சூரிய சந்திரரும், தந்தத்தில் வாயுவும், நாவில வருணனும், நெஞ்சில் சரசுவதியும், மணிகளில் இயமனும் இயக்கரும், உதட்டில் சந்தியா தேவதைகளும், முசுப்பில் அருக்கதேவரும், மார்பில் சாந்தியரும்..............’ இப்படி ஒவ்வொரு அவயவத்திலும் ஒவ்வொரு கடவுளும் தங்கியிருப்பதாகப் புராணம் கூறுகிறது இவற்றை யெல்லாம் படிக்கும் மக்கள், “அடே அப்பா, பசுவைச்சுற்றிலும் இவ்வளவு கடவுள்கள் இருக்கிறார்களா!?” என்று வியந்து மூக்கின் மீது கைவைக்கவும், “இவ்வளவு கடவுள்கள் இருக்க, இதைக் காப்பாற்ற நாம் யார்?” என்று எண்ணவும் செய்வார்கள் அல்லவா? புராண நம்பிக்கையை ஒழித்தால்தானே, பசுவுக்கு விமோசனம் ஏற்படும்?

பசு ஒரு சாதாரண மிருகம்! மிகவும் பயனுள்ள மிருகம்! அதிலே தெய்வத்தன்மையோ, புனித சக்தியோ எள்ளளவும் கிடையாது! இவற்றை மக்கள் நன்றாகப்புரிந்து கொண்டு, விஞ்ஞானமுறைகளைக் கையாண்டு பசுவை வளர்த்தால், நல்ல பலன் நிச்சயம் கிடைக்கும்! அயல் நாட்டுப் பசுக்களோடு, நம் நாட்டுப் பசுக்களும் போட்டியிட முடியும்! இந்த அறிவுப் பிரசாரத்தை, அரசாங்கம் செய்ய வேண்டும்!

பத்திரிகைத் தொழில் முன்னேற வழிகள்

பத்திரிகைக் கமிஷனின் சிபாரிசுகள்

புது டில்லி, ஜூலை. 26—

இந்தியாவின் பல பகுதிகளிலும் சுற்றுப்பிரயாணம் நிகழ்த்தி பல பத்திரிகாதிபர்களையும் ஏனையோரையும் விசாரித்து, இந்தியப் பத்திரிகைத் தொழில் பற்றி, ஒரு நீண்ட அறிக்கையை பத்திரிகை கமிஷன் தயாரித்திருக்கிறது. இந்த அறிக்கை இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

பத்திரிகைத் தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான பல சிபாரிசுகள் இந்த அறிக்கையில் செய்யப்பட்டுள்ளனவாம்

பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பதற்காக சட்டப்படி, அனைத்திந்திய பத்திரிகையாளர்களுக்கான ஒழுக்க நியதிகள் வகுத்தல் பத்திரிகை பதிவாளர் ஒருவரை நியமித்து, பத்திரிகைக் காகித விநியோகத்தைப் பற்றி கவனிக்க அரசாங்க வர்த்தகக் கார்பொரேஷன் நிறுவுதல், பக்கத்திற்கு ஏற்றவகையில் விலை நிர்ணயம், பத்திரிகையாளரின் சம்பளங்களை நிர்ணயித்தல், ஆகியவை பற்றி இந்த அறிக்கையில் சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 40 சதவீதத்திற்கு மேல் விளம்பரங்கள் பத்திரிகையில் போடக்கூடாது என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

வைஜயந்திமாலா கோர்ட்டுக்கு வந்தார்

வேகமாக கார் ஓட்டிய வழக்கு விசாரணை

சென்னை, ஜூலை 26—

முறைப்படி லைசன்ஸ் இன்றி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரை ஓட்டி, மற்றொரு காரின் மீது மோதி, இருவருக்குக் காயம் உண்டு பண்ணியதாக, சினிமா நடிகை வைஜயந்திமாலா மீது தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கெனவே மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டிருந்தப்படி வைஜயந்திமாலா இன்று கோர்ட்டுக்கு நேரில் ஆஜரானார். வைஜயந்திமாலாவுடன் அவரது பாட்டி. தகப்பனார் ஆகியோரும்வந்திருந்தனர்.

பிராசிகூஷன் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு எதிரிவக்கில் குறுக்கு விசாரணை செய்தவுடன், வழக்கு மீண்டும் ஆகஸ்டு 7–ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஆயிரம் விளக்கில் சம்பத்

27-7-54 அன்று மாலை 5-30 மணிக்கு ஆயிரம் விளக்கு அறிவு வளர்ச்சி மன்றத்தின் முதலாண்டு விழா பொதுக் கூட்டம் மன்றச் செயலாளர் தோழர் மு கிருட்டினசாமி தலைமையில் நடைபெறும். புலவர் நன்னன் தோழர் ஈ. வே. கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருவள்ளுவர் வாரக் கொண்டாட்டங்கள்

27-7-54-செவ்வாய் அமைந்தக்கரை- அறிவியக்கக் கழகம்.

28-7-54-புதன் புரசை-சூளைப் பேட்டை மாணவர் முன்னேற்றக்கழகம்.

29-7-54-வியாழன் நுங்கம்பாக்கம் வள்ளுவர் கழகம்.

30-7-54வெள்ளி ஜார்ஜ் டவுன் எஸ்பிளனேடு, ஒய் எம். சி. ஏ, பட்டி மன்றம்.

31-7-54-சனி பெரம்பூர் வள்ளுவர், மறை மலை, திரு. வி. க. மன்றங்கள்

1-7-54-ஞாயிறு வண்ணையம்பதி– திருக்குறள் முன்னணிக் கழகம்.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணிக்கு விழா நடைபெறும். விழாக்களில், தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ. கா அப்பாதுரை, மா. நன்னன், அன்பு கணபதி, அருண்மொழி, பூ. கணேசன், முதலியபலர் கலந்து கொள்வர்.

கிருத்தவக் கல்லூரியில் வள்ளுவர் விழா

29–7 54 வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு தாம்பரம் கிருத்தவக் கல்லூரி, ஆண்டர்டன் ஹாலில், தமிழ் மன்றத் துவக்கமும், வள்ளுவர் விழாவும் நடைபெறும். தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. எம். கே. சண்முகம் தலைமை வகிப்பார் பேராசிரியர் க. அன்பழகன் சொற்பொழிவாற்றுவார்.

★ அறப்போர் தொடுத்தே தீருவேன்! ★

குருசாமி கண்ணீர் வடிக்கிறார் - கவலைபடுகிறார்!

கவர்னர் சம்பள சட்டத்திற்கப்பாற்பட்டதாம்

குத்தூசியாரின் கோணல் புத்தி!

ஆண்மை இருந்தால் மறுக்கட்டுமே!

வேதனை ஓர்புறம்-வேடிக்கையான எதிர்ப்பு மற்றொருபுறம்

மயிலையில் அறிஞர் அண்ணா

(நேற்றையத் தொடர்ச்சி)

அண்டை வீட்டுச் சந்தடிக்கும் சண்டைக்கும் வலியச்சென்று வெற்றிலைபாக்குப் பெறுவது போல எங்களிடம் குருசாமிக்கு என்னவேலை?

பெரியார் இத்தகைய போர் வேண்டாம் என்று கருதுவதாயிருந்தால அவரே கூறுவாரே! கூறட்டுமே! தூற்றினாலும், போற்றினாலும் அவராகிவிடுவாரா இவர்? பெரியார்தானா குருசாமி?

சென்னை, ஜூலை. 26—

சென்னை, மயிலையில் 25-7-54-ல் நடைபெற்ற தி. மு. க. கூட்டத்தில் பேசிய அறிஞர் அண்ணா பேச்சின் மற்றொரு பகுதி.

கவர்னர் சம்பளக் குறைப்பு பற்றி நான் ஈரோட்டில் பேசியதைப் பற்றி விடுதலைப் பத்திரிகையில் தோழர் குருசாமி திட்டியுள்ளதைப் பற்றித் தோழர்கள் பல விதமாகக் கேட்கிறார்கள்.

விடுதலையாருக்கு நாம் அங்கிருந்து விடுதலை பெற்றுவிட்டதே பெருங்கோபம்.

ஈரோட்டின் மும்முனைப் போராட்ட விழா நாளன்று நான் பேசுகையில் குறிப்பிட்டேன். 'மும்முனைப் போராட்டத்துடன் தி. மு. கழகத்தின் போராட்டங்கள்முடிந்து விட்டதாகவும் இனி வேறு போராட்டங்களே இல்லை என்பதாகவும் எண்ணிவிடக் கூடாது; மேலும் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டிய நிர்ப்பந்த நிலைமை நமக்கு ஏற்படக் கூடும். கவர்னர் வாங்கும் ஏராளமான சம்பளத்தைக் குறைக்கும்படி ஏன் கேட்கக் கூடாது. குறைத்துக் கொள்ளும்படி கேட்போம். ஆறு மாதங்களில் குறைத்துக் கொள்ளாவிட்டால் கவர்னர் சம்பளக் குறைப்பு போராட்டமேகூட தி. மு, கழகத்தின் அடுத்த போராட்டமாக இருக்கலாம்' என்று,

நண்பர் குருசாமி இதற்கு அரசியல் சட்டத்தில்அதிகாரமில்லையென்று சட்டத்தைப் புரட்டித் திட்டிக் காண்பிக்க ஆரம்பித்து விட்டதைக் கண்ட பிறகுதான் யோசனையில் வைத்திருந்த கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்தை நடத்தவே தீர்மானித்து விட்டேன்.

அரசியல் சட்டப் பிரிவுகளில் இதற்கு ஆதரவு இருக்கிறதோ இல்லையோ அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை சிறை அறைகளில் இடமிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அதைப் பற்றியும் எண்ணப் போவதில்லை. கவர்னர் சம்பளம் குறைவதற்கான அறப்போர் தொடுத்தே தீருவேன்.

ஏன், கவர்னரையே கேட்போம், 'ஐயா உமது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்? குறைத்துக் கொள்ள சட்டத்திலே இடமில்லை யென்றாலும். அவருடைய புத்தியில் கூடவா இதற்கு இடமில்லாமல் போய் விடும்? கேட்டுத்தான் பார்ப்போமே. அவராகக்குறைத்துக் கொண்டால் நல்லது தானே?

கவர்னரே பல தடவைகள் கூறியிருக்கிறே, அவரது குடும்பத்தார் மூன்று தலைமுறைகளாகப் பெரும் வியாபாரிகள் என்றும் அதிலும் சென்னை மாகாணத்தில் வியாபாரம் செய்துதான் திரண்ட செல்வம் திரட்டினார்கள் என்பதையும், அந்தச் செல்வம் இன்னும் நான்குதலைமுறைகளுக்குப் போதுமானது என்பதாகவும் கவர்னர் பொதுக் கூட்டத்தில் பேசியுள்ளாரே.

நண்பர் குருசாமி சுட்டிக்காட்டிய சட்டம் பற்றி அக்கரையில்லை. 'ஐயா கவர்னரே, உமக்குத் திரண்ட செல்வம் இருப்பதாகக் கூறினீரே, உமது சம்பளத்தைக் குறைத்து கொள்ளுங்கள். குறைத்துக்கொள்ள சட்டப்படி முடியாதென்றால், சம்பளத்தில் ஒரு பகுதியை மாதந்தோறும் ஒரு சேரிக்காகவாவது ஒதுக்குங்கள்; உமது திக்குநோக்கித் தெண்டனிடுகிறோம்' என்று கேட்போம். கவர்னர் என்ன செய்கிறார் என்பதைக் கவனித்து, போர் அவசியமானால் நிச்சயமாகப் போர் தொடுக்கத்தான் பேசுகிறேன்.

நாங்கள் காமராஜரை ஆதரிக்கும் நேரமாகப் பார்த்து அவருக்குத் தொல்லை தரவே போராட்டம் ஆரம்பிப்பதாகக் குருசாமி கண்ணீர் வடிக்கிறார்-கவலைப்படுகிறார். சட்டப்படி செல்லாது என்று சட்டம் பேசப் புறப்படுகிறார்.

காமராஜரை இவர்கள் ஆதரிக்கட்டும் இவர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்காகக் காமராஜரை மற்றவர்களும் ஆதரித்தாகவேண்டும் என்று என்ன கட்டாயம்? நீங்கள் எதையும் செய்வீர்கள். அதையெல்லாம் அனைவரும் அப்படியே பின் பற்ற வேண்டுமா? எதிர்பார்க்கலாமா? முடியாது.

கடத்த பொதுத் தேர்தலில் காமராசரை எதித்தீர்கள், ஜி. டி, நாயுடுவை ஆதரித்தீர்கள் ஜி. டி. நாயுடு எனது நண்பராக இருந்தும், கழக அனுதாபியாக இருந்தும், தி. மு. க. மாநில மாநாட்டிலே மேடைக்குப்பக்கத்தில் அமர்ந்திருந்து ஆதரவு கேட்டபோதும் தி மு,க. ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட மறுத்தார், என்பதற்காக மட்டுமே அவரை நாங்கள் ஆதரிக்காமல் விட்டுவிடவில்லையா? அன்று காமராசரை எதிர்த்தீர்கள். இன்று அதே காமராசரை பச்சையாக ஆதரிக்கிறீர்கள். அன்றுநான் காமராசரிடம் காசு பெற்று ஜி, டி, நாயுடுவை ஆதரிக்கவில்லை என்றே குற்றம் சுமத்தினீர்கள், இதைத்திருப்பிக் கேட்க எவ்வளவு நேரமாய் விடும்? எனக்கே காமராசர் காசு கொடுத்தார் என்றீர்களே, இப்போது உங்களுக்கு என்னை விட அதிகமாக காசு கொடுத்திருக்கவேண்டுமென்று நான் கேட்கிறேன்? கேட்டேனா? இல்லையே! உங்களைப் போன்று சின்னத்தனமாகக் கேட்டுவிட எனக்கு மனம் வரவில்லை. அங்கிருந்து நான்கற்ற பெருந்தன்மையை இன்னமும்கடைப்பிடித்தேவருகிறேன்! இனியும் கடைப்பிடித்துத்தான் வருவேன், அங்கேதான் நாங்கள் பிரிந்த பிறகு சிறுமைக்குணம் மிக ஏராளமாக வளர்ந்து விட்டிருப்பதாகத் தெரிகிறது.

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் நிச்சயமாக நடக்கும்—ஏன், காமராசரிடம் சொல்லி விட்டே நடத்தலாமே? 'ஐயா காமராசரே, கவர்னர் இவ்வளவு கொள்ளைச் சம்பளம் வாங்கலாமா? அதைக் குறையுங்கள்—குறைக்கச் சொல்லுங்கள். உம்மால் முடியா விட்டால் டெல்லிக்காவது எழுதுங்கள்' என்று கூறிவிட்ட பின்பே போராட்டத்தை நடத்துகிறேன் அதனால் என்ன கஷ்டம் நஷ்டம் வந்து விடப் போகிறது?

ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதன் மந்திரியாக இருந்த காலத்தில் திராவிடக் கழகத்தில் நாங்களும் இருந்த அந்தக் காலத்தில் ஓமந்தூர் ரெட்டியார் பெரியாரை அழைத்து இந்தி எதிர்ப்பை நிறுத்தும்படி கூறினார், அதற்குப் பெரியார், கட்சி இந்தி கூடாது என்கிறது. ஆகவே இந்தி எதிர்ப்பு நடக்கும் என்று கூறிவிட்டே அறப்போர் நடத்தவில்லையா?

ஓமந்தூர் ரெட்டியார் நல்லவர் தான். ஆனால் அவர் புகுத்தும் இந்தி கெட்டது, ஆகவே இந்தியை எதிர்க்கிறேன் என்று தானே அன்று பெரியார் சொன்னார்.

காமராசர் நல்லவராக இருக்கலாம், ஆனால் அவர் காலத்தில் கூடவா கவர்னருக்குக் கொள்ளைச் சம்பளம் என்று கேட்ட பிறகே நான் இன்றுஅறப்போர் தொடங்குகிறேன். தவறென்ன இதிலே!

காமராசருக்கு இதனால் சங்கடம் என்றால் அதைக் காமராசர் கூறட்டுமே காமராசரோ இதுபற்றி எதுவுமே கூறவில்லை. அவர் இப்போராட்டத்தை விரும்பினாலும் விரும்பக் கூடும்! அதுபற்றி குருசாமிக்கு என்ன தெரியும்? தெரிய முடியும் என்று கேட்கிறேன். குருசாமியை எனக்குத் தெரியாதா என்ன? நெடுநாட்களாகத் தெரியுமே?

பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தை நான் இருந்திருந்திருந்து தடுத்திருந்துஅதை ஏற்காவிட்டால் என்வரையில் நான் அதிலிருந்து விலகித்தான் இருந்திருப்பேன்.

ஆகஸ்டு பதினைந்து இந்திய சுதந்திர நாளைத் துக்க நாளாகக் கொண்டாடக் கூடாதென்று ஒருஇரவுபூராவும்பன்னிப்பன்னி எடுத்துரைத்தேன். வருங்காலத்தில் நாடுநம்மை இதனால்இழிவாகக் கருதக்கூடும் என்றும் கூறினேன். ஏற்கவில்லையே! கடைசியாக என். வி. நடராசன் மூலம் பத்திரிகையிலாவது மேற்கொண்டு எதுவும் துக்கநாள் பற்றி எழுத வேண்டாமென்றும், வேறு நாளைக் குறிப்பிட்டு அன்று வேண்டுமானாலும் துக்க நாள் கொண்டாடலாமென்றும் குறிப்பிட்டேன். என் கருத்துக்கு அவர்கள் முரண்பட்டபோது, அதனை என்னால ஏற்க முடியாதபோது நான் தன்னந்தனியாகத் துக்க நாளில் கலந்து கொள்ளாமல் விலகத்தானே விலகினேன்?

என் கருத்துக்கு ஒத்துவரும் எந்தக்கருத்துக்கும்நான் என்றும் கட்டுப் படுவேன். ஆனால் எனக்குப் பிடிக்காத எனது கருத்திற்கு ஒத்தவராத எதையும் என்னால் ஆதரிக்கவே முடியாது.

நாங்கள்தான் அங்கிருந்து விலகிப் பிரிந்து வந்து வேறு குடித்தனம் அமைத்து விட்டோமே! நாங்கள் பிரிந்துவிட்ட பிறகும் அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஏதேதோ திட்டங்களையெல்லாம் நாங்களும் ஏற்று நடக்க வேண்டுமென்பது என்ன விதி? கட்டளை? அப்படியொன்றும் நடக்காது. அங்கே இருந்து; எங்கள் ஒப்புதலுடன் ஏற்படுத்திய கருத்துக்களையும், அங்கே நாங்கள் பெற்ற கருத்துக்களையும் நாங்கள் அப்பழுக்

(4ம் பக்கம் பார்க்க)

அறப்போர் தொடுத்தே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

—

இன்றிகாப்பாற்றுகிறோமா? நல்ல விதமாகப் போற்றி வளர்த்து வருகிறோமா என்பது பற்றி வேண்டுமானால் நீ ஏதோ கவலைப்பட்டால் சிறிதாவது அர்த்தமிருக்கும்.

டாக்டர் நோயாளிக்கு மருந்து கொடுத்துவரும்வரை தானே பத்தியச் சாப்பாடு பற்றி விசாரிப்பார்-விசாரிக்கவும்வேண்டும். நோய் தீர்ந்து ஆறு மாதமான பிறகுபத்தியபோதனைபுரிவாரா? புரிவதுதான் தேவையானதா? இல்லை. அதைப்போலவேதான் உங்களிடமிருந்து பிரிந்துவிட்டோம், இது எங்கள் போராட்டம் இதில் குருசாமி தலையிட்டுப் பேசுவதும் எழுதுவதும் தகுதிதானா?

திராவிடநாட்டுப் பிரிவினைக் கொள்கை, நாம் திராவிடர் கழகத்திலிருந்துகொண்டு வந்தது தான், அதனை அப்பழுக்கின்றிப் பாதுகாக்கப் பாடுபட்டுத் தானே வருகிறோம். மதமாசுகளைத் துடைத்திடும் பணியைச் சிறிதளவும் குறைக்கவில்லையே, நாங்கள்? சமுதாய, பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தும் பணியை விட்டு என்றும் விலகமாட்டோம்.

அவர்கள் எதையும் பேசுவார்கள்; எது வேண்டுமானாலும் செய்வார்கள். அது அவர்களுக்கு ஜீரணமாகலாம்.

சென்ற பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளை எவ்வளவு ஆதரித்தார்கள்! இன்று அதேகம்யூனிஸ்டுகளை யெதிர்த்து குடியாத்தம் தொகுதியில் காங்கிரசையே ஆதரிக்கிறார்களே? கம்யூனிஸ்டுகளை என்னபாடு படுத்துகின்றனர், இப்போது?

அவர்களது ஜீரணக்கருவி சராசரி மனித அளவுக்கு மேற்பட்டதுபோலும் அதனால்தான் எதையும் பேசி, எதையும் செய்து ஜீரணித்துக் கொள்ள முடிகிறது, நம்மால் அப்படி முடியாது. நாமெல்லாம் சராசரி மனிதனது ஜீரணக்கருவியைத் தானே பெற்றிருக்கிறோம்? அவர்களைப் போல நாம் அவர்களைத் திருப்பிகூடக் குறை கூறியதில்லையே?

நீங்கள் எத்தனையோ கூட்டங்களில் நாடகங்களே கூடாது என்று பேசியிருக்கிறீர்கள், அப்படிப் பேசிவிட்டு உங்கள் மாநாடுகளிலே நீங்களேநாடகம் போட்டுத் தலைமையும் வகிக்கிறீர்களே? இது சரியான்றுவது கேட்டிருக்கிறோமா? கிடையாது.

பிள்ளையார் உடைப்பு என்று கூறி, புதுப்பிள்ளையார்களைச் செய்யச் சந்தர்ப்பம் தருவதா என்றுகூடக்கேட்கவில்லையே!

காமராசரை எதிர்த்தவர்கள்-காங்கிரசை எதிர்ப்பவர் காமராஜரை ஆதரிப்பதா என்று கேலி பேசினோமா? இல்லை அவர்கள் குறை சொன்னார்கள் நாம் கேட்டுக் கொண்டோம் தூற்றினார்கள்—பதற வில்லை. பொறுத்துக் கொண்டோம். அவர்களது குறைகளைப்பற்றிக்கடுகளவுகூட நாம் திருப்பிக் கேட்கவில்லை என்பதால் நண்பர் குருசாமி அளவுக்கு மீறி உபதேசம் செய்யுமளவுக்கு வருவதா? அவர் நிலைக்குத்தான் அது தகுமா. முடியுமா?

ஒரு வீட்டிற்கும் இன்னொரு வீட்டிற்கும் இடையிலே ஜன்னல் இருந்தால் என்ன செய்வது? அடிக்கடி அடுத்த வீட்டிற்குள் எட்டிப் பார்க்கவா அதைப் பயன்படுத்துவது? நாணயக் குறைவான மனிதன் செய்யும் வேலையல்லவா அது?

அடுத்த வீட்டில் சந்தடி ஏதாவதுகேட்டால் பண்புள்ளமனிதராக இருப்பின் ஜன்னலை உடனே மூடிவிடுவார். ஆனால் நேர்மையும் நாணயமும் அற்றவர்கள் அடுத்த வீட்டில் சந்தடி என்றதுமே சட்டென்று மூடியிருந்தாலும் ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்ப்பர், உற்றுக் கேட்டுக் கவனிப்பர். நண்பர்குருசாமி, அடுத்த வீட்டுச் சந்தடியை அடிக்கடி ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்து உற்றுக் கேட்பதுபோல தி. மு. கழகத்தின் சிறு சிறு வேலைகளிலும் அவசிய மற்றுத் தலையிடப் பார்க்கிறார் உபதேசம் புரியவே ஆரம்பிக்கிறார்.

குருசாமியை யார் எட்டிப் பார்க்கச் சொல்கிறார்கள்? அவரது புத்திமதியை யார் கேட்டார்கள்? யாருக்குப் புத்திமதி தேவை, யார் தரவேண்டும், யாருக்குத் தரவேண்டும், எப்போது தரவேண்டும் என்பது கூடத் தெரியாது பொறுப்பற்றுப் புத்திகூறப்புறப்படுகிறாரே? சரியா?

கவர்னர் சம்பளத்தைக் குறைப்பது காமராஜருக்குச் சங்கடம் என்பதுபற்றி உனக்குக் கவலையிருந்தால் கவர்னர் சம்பளத்தை உடனே குறைத்துக் கொள்ளும்படி செய்யேன். பார்க்கலாம்! உன்னால் முடிந்தால் சொல்லிப்பார்-கேட்டுப் பார்? இல்லாவிடில் கவர்னர் சம்பளக் குறைப்புப்போர் நடத்தும் எங்களை எதிர்த்துப் போரிடேன்! ஆண்மையிருந்தால் செய்து தான் பாரேன்! அதைச் செய்! செய்து பார்! உன்னால் முடிந்தால்.

அண்டை வீட்டுச் சந்தடிக்கும், சண்டைக்கும் வலியச் சென்று வெற்றிலை பாக்குப் பெறுவது போல எங்களிடம் உனக்கென்ன வேலை?

பெரியார் இத்தகைய போர் வேண்டாம் என்று கருதுவதாயிருந்தால் அவரே கூறுவாரே! கூறட்டுமே! தூற்றினாலும், போற்றினாலும் அவராகி விடுவாரா இவர்? பெரியார் தானா குருசாமி?

பெரியார் வேண்டாம் என்று கூறினால் அவரிடம் கொண்டுள்ள பக்திக்காகவும் பற்று பாசத்திற்காகவும். கண்ணீர் விட்டுக் கைவிட்டாலும் விடுவேனே தவிர, குருசாமியின் குறும்புக்கா செவிசாய்ப்பேன்? மாட்டவே மாட்டேன்.

எதையும் எழுதலாம் என்ற நினைப்பில் குருசாமி எழுதுகிறார். மற்றவர்களுக்கும் எழுதத் தெரியாதா? எழுதாமல் இருப்பது ஏன்? மனதிலே மாசு மரு இல்லை யென்ற காரணந் தானே தவிர, வேறில்லை. எங்களாலும் எழுத முடியும் என்பது அவருக்கே நன்றாகத் தெரியுமே? நாங்கள்' எழுதினால், நிச்சயமாகக் கூறிவிடுகிறேன், அவரால் அதனைத் தாங்கிக் கொள்ளவே முடியாது.

தி. மு. கழக ஆரம்பத்தில் எவ்வளவு தூற்றினார்கள். அவற்றை நாம் தாங்க வில்லையா? கொலைகாரன் என்றே கூறிப் பினனர் கோர்ட்டில் இல்லை யென்றார்களே! அதைப்போல நான் ஒவ்வொரு அவதூறுக்கும் கோர்ட் ஏறித்தானாக வேண்டுமா? தேவையில்லை. தாங்குவோம்—மேலும் மேலுந் தாங்குவோம்—தாங்கித் தாங்கியே வளர்வோம்.

தி. மு. கழகம் எந்தப் போராட்டங்களையும் வலிய சென்று அணைத்துக்கொள்ளாது ஆனால் எந்தப் போராட்டப் பிரச்சினைகளையும் அலசிப் பார்த்து அவசியமான போராட்டங்களை நடத்தவும் தவறாது.

ஈரோட்டில் கவர்னர் சம்பளம்பற்றி நான் என்ன பேசினேன்? கவர்னர் தனக்குத் தரப்படும் ஏராளமான சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்கலாம். அவகாசம் வேண்டுமானாலும் தரலாம். ஆறு மாத காலத்தில் அதற்கான போராட்டத்தில் தி மு கழகம் ஈடுபடக்கூடும் என்பது தான்.

நான் பேசியது என்ன என்பதைச் சரிவர தெரிந்து கொள்ளாமலேயே குருசாமி அவசரப் பட்டு விட்டாரே?

ஒருவனைப் பார்த்து நீ என்னை குரங்கு என்று கூறினாயாமே என்று கேட்டு அவன் சொன்னானா இல்லையா என்பதைப் பற்றிக் கவலைப் படாமல் மேலும் உன் முகம் கழுதைமாதிரி இருக்கிறது நாய் மாதிரி குலைக்கிறாய் என்பன போன்று பேச முற்படுவது அரசியலா? அரசியல் பேசும் பத்திரிகையாசிரியர் பேச்சாகுமா? அது சைனா பஜார் சந்து முனைப் பேச்சு தானே

குருசாமி'யார் என்பதும் நான் யார் என்பதும் எனக்கும் தெரியும் அவருக்கும்தெரியும், தெரிந்துமா அவர் எனக்குப் புத்தி புகட்ட வருவது? அவர் தகுதி என்ன? என் தகுதி என்ன என்பதை ஊரே அறியுமே! யானை மேலே செல்லுபவனுக்குக் கடைக்காரனால் சுண்ணாம்பு தர முடியுமா?

போர்—போர் என்று நாங்கள் அலைகிறோம்? நாங்கள் எந்தப் போரும் புரியாமலே சிலம்பக் கூடங்கள் ஏற்படுத்தி சிலம்பப் பயிற்சி பெற்றுத் தோள்கள் தினவெடுத்தா கிடக்கிறோம் இல்லையே?

அண்டை வீட்டுச் சந்தடிக்கு வலியப்போய் வெற்றிலைப்பாக்கு வாங்கும் வேலை வேண்டாம், நண்பர் குருசாமிக்கு! சட்ட நுணுக்கம்தர எனக்கு அவர் தேவையில்லையே. சட்டம்எனக்குத் தெரியாமலா ஈரோட்டில் பேசினேன்? இன்றும் பேசுகிறேன், அல்லது சட்டம் பேசும் அவர் எந்த சட்டத்தை மதித்து எழுதுகிறார்—எழுதியிருக்கிறார்? என்று திருப்பிக் கேட்க முடியுமே?

நண்பர் குருசாமி குடும்பச் சண்டையை வீணாகக் கிளறிப் பெரிதாக்க வேண்டியதில்லை என்றுதான் கூறுகிறேன்.

தோழர்களே! நீங்கள் இப்படிப்பட்ட செய்திகளைக் கண்டும் கேட்டும் எந்தவிதமான பரபரப்பும் அடைய வேண்டியதில்லை என்று கூறி; நமது பணியின் தன்மையை நாம் நல்லபடி அறிந்து. தக்கபடி உணர்ந்து காரியமாற்றல் வேண்டுகிறேன்.

நம் மனைவி நமது கண்ணிற்கும் கருத்திற்குந்தான் அழகாய் இருக்கவேண்டுமே தவிர, அண்டை வீட்டுக்காரனுக்கு அல்ல! அண்டைவீட்டான் அழகு என்றுசொல்வதிலே சில நேரங்களில் ஆபத்தும் உண்டு. அயலான் அவலட்சணம் என்பதனால் பல நேரம் பாதுகாப்பு உண்டு என்று உணர்ந்து நமது கழகப்பணி நமக்குப் பிடிக்க வேண்டுமே தவிர தேவையானதாக இருக்க வேண்டியது அவசியமே ஒழிய மாற்றார் மனமாற்றங்களைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்பதையும் கருத்தில்கொண்டு பணியினைத் தொடர்ந்து நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்,

மகத்தான திராவிட இன எழுச்சியின், முன்னணிச் சக்தியாக விளங்கிடும் தி. மு, கழகத்தை மென்மேலும் பலப்படுத்தி, ஆக்கவேலைகளில் ஈடுபட்டு நாம் மேலும் செய்ய வேண்டிய காரியங்களில் ஈடுபடவேண்டிய போராட்டங்களில் வெற்றி கண்டிடும் வெற்றி வீரர்களின் அணிவகுப்பை — பகுத்தறிவுப் பாசறையாக அமைத்திடவேண்டுகிறேன்,

—

மலைக்கள்ளன்

(திரைக்கதை வசனம் பாடல்கள் அடங்கியது)

வசனம் : கலைஞர் மு. கருணாநிதி

கண்ணைக் கவரும் கலர் அட்டையுடன் கூடியது

விலை அணா 0—8—0

விற்பனைக் கழிவு 50%

[விவரங்கட்கு]

K. R. நாராயணன்

14-ஏ. குப்பையர் தெரு, சென்னை—1.

(ADVT

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை

ஒரத்தகாடு. ஜூலை 26—

தஞ்சை மாவட்ட கால்நடைப் பண்ணையை விவசாயமந்திரிதிரு, பக்தவத்சலம் நேற்று ஒரத்தநாட்டில் திறந்து வைத்தார்.

திருமதி, எம். ராஜம் அவர்களுக்குச் சொந்தமான மெர்கண்டைல் அச்சகத்தில் திரு. டி. பி, சுப்பிரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2-45 முத்து மாரிச்செட்டித்தெரு, சென்னையில் வெளியிடப்பட்டது.